# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1658/31 - 2010 ජුනි 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.17

*1658/31 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளைமூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில் அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதியிலிருந்து தொடங்குகின்ற 3 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2010, யூன் 17.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| | | | வியாபாரப் பண்ட இனம் | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 17.01 | 1701.11 | கரும்பு சீனி | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.12 | பீற் சீனி | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.91.10 | சீனி | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.91.90 | பிற | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.10 | வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.20 | வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.30 | பீற் சீனி | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |
| | | 1701.99.90 | பிற | ரூபா 5.00 கி. கிராம் ஒன்றுக்கு |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.